**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திறனாய்வு என்ற சொல்லை வழக்கில் கொண்டு வந்தவர் யார்?
2. இலக்கியத்தின் பாடுபொருள் யாது?
3. திறனாய்வுக் களமாகவும் இலக்காகவும் இருப்பது எது?
4. இலக்கியக் கலையின் அரசி என அழைக்கப்படுவது எது?
5. திறனாய்வாளரின் தகுதிகளுள் முதன்மையானது எது?
6. இலக்கியத்தை மதிப்பீடு செய்கிற பண்பினை அடியொற்றியது எது?
7. திறனாய்வாளரின் இரண்டு கண்கள் எனப் போற்றப்படுபவை எவை?
8. அறங்களை மையப்படுத்தும் திறனாய்வு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
9. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எது?
10. தமிழில் அதிக உரை கண்ட இலக்கண நூல் யாது?
11. முல்லைப்பாட்டாராய்ச்சியின் ஆசிரியர் யார்?

12. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?
13. இலக்கியத் திறனாய்வின் புதிய கோணத்தை எவ்வாறு அழைப்பார்?
14. கோபல்ல கிராமம் நாவலின் ஆசிரியர் யார்?
15. தலித் – எம்மொழிச் சொல்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. இலக்கியத் திறனாய்வு என்றால் என்ன? அதன் ஆங்கிலச்சொல் யாது?
2. சொல்வளம் என்பது எதைக் குறிக்கும்?
3. திறனாய்வின் வகைகளின் மூன்றினைக் குறிப்பிடுக.
4. இலக்கியத் திறனாய்வின் ஐந்து அணுகு முறைகள் எவை என வில்பர் ஸ்காட் குறிப்பிடுகிறார்?
5. காண்டிகை உரையில் இடம் பெற வேண்டுவன எவை?
6. ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை நூல்களின் சிலவற்றைக் குறிப்பிடுக.
7. நவீனத்துவத்தின் வெளிப்பாடுகள் எவை?
8. தலித் எழுச்சிக்கு வித்திட்டவர் யாவர்?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) இலக்கியமும் வாழ்க்கையும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கலை கலைக்காகவே எனும் வாதம் குறித்து நிறுவுக.

2. (அ) அழகியில் அணுகுமுறைத் திறனாய்வு குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) செவ்விலக்கியங்களும் திறனாய்வும் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) ஈழம், மார்க்சியத் திறனாய்வாளர்கள் பங்கினை விவரி?

(அல்லது)

(ஆ) பெண்ணியத் திறனாய்வு குறித்துக் கட்டுரைக்க.

❋ ❋ ❋